2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தக் கோரிக்கையோடு முடியுங்கள்.*

திரு. துரைமுருகன்: *அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்வார் என்கிற நம்பிக்கையில்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு உங்களிடம் கேட்கிறேன். செய்வார் என்கிற நம்பிக்கையில் உட்காருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சர் அவர்கள் செய்வார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை குறித்து உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*